தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசுபண்ணைகிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டைமெட்ரோரயில்நிலையம்அருகில்),
தொலைபேசி: 044-29515590

ஆணை நாள். 07.07.2026

முன்னிலை

திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,
மாநிலதகவல்ஆணையர்

*****

வழக்கு எண். SA 11932/H/2024

திரு S.அறிவழகன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருத்தணி வட்டம்
திருவள்ளூர் மாவட்டம் — பொது அதிகார அமைப்பு

பொது தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்.

கோரிய தகவல்: மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 24.05.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் மேல்முறையீட்டாளர் 20.11.2023 அன்று கே.ஜி.கண்டிகையில் இருக்கும் அரசுக்கு சொந்தமான ஓடை புறம்போக்கு நிலங்களான புல எண்கள் 132/2, 29 ஏர்ஸ், 134/1 76 ஏர்ஸ், 132/13 14 ஏர்ஸ் 123/6 28.50 ஏர்ஸ், 126/23 50 ஏர்ஸ், 128 23.50 ஏர்ஸ் ஆகிய 6 புல எண்களின் உள்ள இடத்தை அளவீடு செய்து அளவீடு கல்லை நட வேண்டும் என்று அரசாணை 540ன்படி அகற்ற திருத்தணி வட்டாட்சியருக்கு அனுப்பிய மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் கோரி மொத்தம் 11 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத்தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து மேல்முறையீட்டாளரால் 09.09.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (07.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு S.அறிவழகன் அவர்கள் விசாரணைக்கு இன்று நேரில் ஆஜரானார். |
| பொதுத்தகவல் அலுவலர் | பொதுத்தகவல் அலுவலர் திரு. ஏ.செந்தில்குமார், வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், திருத்தணி அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

## ஆணை

இன்றைய (07.07.2026) விசாரணையின்போது ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 30.05.2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், தனக்கு பொது தகவல் அளித்த பதில் திருப்தியளிக்கவில்லை என தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில் இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வாணையம் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:-

- *இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மனுதாரர் 24.05.2024 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள இனங்களில், பொது தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்கள் இனம் 1க்கும், பொது தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருத்தணி அவர்கள் இனம் 2க்கான முழுமையான தகவல்களை, மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக ஆணையத்திற்கு 04.08.2026 அன்று நேரடியாக சமர்ப்பிக்குமாறும், தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA 11932/H/2024

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருத்தணி வட்டம்
திருவள்ளூர் மாவட்டம்

பொது தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்.

மேல்முறையீட்டாளர்

திரு S.அறிவழகன்
செருக்கனூர் காலனி (ம) அஞ்சல்
திருத்தணி வட்டம்
திருவள்ளூர் 631 205.

Copy to : Judgement file

VM/PA